மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அசல் வழக்கு எண்.59/2017 நாள்– 21.09.2023

வாதியின் / பிரதிவாதியின் ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி P.சீதாலட்சுமி, Gr.III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்– ராஜாமோகன் (வா.சா.3)<br>மண்டல துணை வட்டாட்சியர் | தந்தையின் பெயர்– |
| விலாசம்– | தாலுகா– |
| வயது– | தொழில் |
| ஜாதி– | சமயம்– |

நான் தற்போது வெம்பக்கோட்டை மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து வட்டாட்சியருக்கு வரப்பெற்ற அழைப்பாணையின் பேரில் வட்டாட்சியரின் உத்தரவின் பேரில் நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு வழங்கப்பட்ட அதிகார கடிதம் வா.சா.ஆ.35 ஆகும். அழைப்பாணையில் சொல்லியுள்ள ஆவணங்களை நீதிமன்றத்திற்கு கொண்டுவந்துள்ளேன். வெம்பக்கோட்டை வட்டத்தில் உள்ள சேர்வைக்காரன்பட்டி, சங்கரபாண்டியபுரம் கிராமத்திற்கான புல வரைபட நகலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.36. (அசல் திரும்ப ஒப்படைக்கப்பட்டது). தாவா வண்டிப்பாதையானது சங்கரபாண்டியபுரம் கண்மாயில் இருந்து ஆரம்பித்து கிழக்கு நோக்கி வந்து சங்கரபாண்டியபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி மைதானம் வழியாக செல்கிறது. தாவா நடக்கும் இடம் சர்வே எண்.14/1, 14/2, 14/3ல் 14/2ல் பாதை இல்லை என்பதுதான் இந்த வழக்கின் சாராம்சம் என்றால் கிராம கணக்கு மற்றும் புலப்படநகலின் படி சர்வே எண்.14/2 ஆனது வண்டிப்பாதை என்று தான் உள்ளது. ஸ்தலத்திலும் வண்டிப்பாதை உள்ளது. அந்த வண்டிப்பாதையானது பள்ளிக்கூடம் மைதானம் அமைந்திருக்கும் இடத்தில் இருப்பதால் பள்ளிக்கூடத்தில் கிழக்கு பக்கத்தில் ஒதுக்கி வண்டிப்பாதையாக கொடுக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கூட சுற்றுசுவர் கட்டுவதற்கு முன்பாக அந்த

வண்டிப்பாதை பள்ளிக்கூட மைதானம் அமைந்துள்ள இடத்தின் வழியாகத்தான் இருந்தது. அந்த பாதைவழியாகத்தான் வண்டிகள் சென்று வந்தன என்றால் சென்று வந்தன. சுற்றுசுவர் கட்டுவதற்கு முன்பாக அந்த மைதானம் வழியாக வண்டிப்பாதை அமைந்திருந்தது. தற்போது பள்ளிக்கூடத்திற்கு கிழக்கு புறத்தில் வண்டிப்பாதை உள்ளது. பள்ளிக்கூட சுற்றுவருக்கு கிழக்குபுறத்தில் ஓடை உள்ளது என்றால் கிராம புலப்பட நகலில் ஓடை இருப்பதாக குறியீடு செய்து காண்பிக்கப்பட்டுள்ளது. தாவா பாதையானது சங்கரபாண்டியபுரம் பள்ளிக்கூடத்திற்கு தெற்கு நோக்கி சென்று சங்கரபாண்டியபுரம் எல்லையை கடந்து சேர்வைக்காரன்பட்டி எல்லைக்குள் தெற்கு நோக்கி செல்கிறது. சங்கரபாண்டியபுரம் எல்லை முடிந்து சேர்வைகாரன்பட்டி கிராமத்தில் தெற்கு நோக்கி வண்டிப்பாதை செல்கிறது. அது மேற்கில் இருந்து ஆரம்பித்து தென்கிழக்காக சென்று தெற்கு பக்கம் நோக்கி செல்கிறது. தாவா சொத்தை நான் பார்வையிட்டுள்ளேனா என்றால் பார்வையிட்டுள்ளேன். சங்கரபாண்டியபுரம் எல்லையை தாண்டி செல்லும் போது தெற்கு நோக்கி 300 மீட்டருக்கு பள்ளமாக உள்ளது. அந்த பள்ளத்தின் ஆழம் 4 அடி இருக்கும். "அ" பதிவேடு எந்த ஆண்டுக்கானது என்றால் 1983 ஆண்டுக்கானது. "அ" பதிவேட்டின் நகல் வா.சா.ஆ.37 ஆகும். அந்த "அ" பதிவேட்டின் படி வண்டிப்பாதை புலஎண்.13, 12, 14, 15, 16, 17, 35 வழியாக செல்கிறது. சர்வே எண்.14 மேற்குபுறத்தில் சங்கரபாண்டியுபுரம் எல்லைகல்லில் இருந்து கிழக்கு பக்கம் 19.4 மீட்டர் அகலத்தில் சர்வே எண்.14 க்கு மேல்புறம் தென்வடலாக ஓடை செல்கிறது என்றால் கிராமக் கணக்கில் அவ்வாறு இல்லை. கிராமக் கணக்கில் ஓடையை உட்பிரிவு செய்யாமல் UDR க்கு பின்னிட்டு திட்டமிட்டு சர்வே எண்.14 ல் உள்ள நடுமையத்தில் சர்வே எண்.14/2 உட்பிரிவு செய்யப்பட்டு அது பாதையாக பின்னிட்டு திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனுதாரர்கள் ஆட்சேபனை செய்ததற்கான குறிப்புகள் எதுவும் இல்லை. சங்கரபாண்டியபுரம் மேல்நிலை பள்ளியில் மைதானத்தின் நடுமையத்தில் பாதை சென்றதால் அரசு பள்ளிக்கூட சுற்று சுவருக்கு கிழக்கு புறத்தில் பொதுமக்கள் வண்டிப்பாதையாக பயன்படுத்தி வருகிறார்கள். அந்த இடத்தில் அரசு ஆவணங்களின் படி பாதை எதுவும் உட்பிரிவு செய்யவில்லை என்றால் சரிதான். சங்கரபாண்டியபுரம் கிராம புல எண்.377 ல் மட்டும் கிராமக் கணக்கில் உள்ளவாறு இல்லாமல்

வண்டிப்பாதை அமைந்துள்ளது. ஏழாயிரம் பண்ணையில் இருந்து சங்கரபாண்டியபுரம் கிராமம் வழியாக சங்கரன்கோவில் செல்லும் தார் சாலை உள்ளது என்றால் சரிதான். சங்கரபாண்டியபுரம் கண்மாயில் இருந்து ஆரம்பித்த பா தை தற்போது அவசிம் இல்லாத காரணத்தினால் விவசாய பூமியாக ஆக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பொதுமக்கள் வண்டிப்பாதையாக பயன்படுத்தி வருகிறார்கள். தாவா சொத்து சர்வே எண்.14 வரை வண்டிப்பாதையாக பள்ளமாக உள்ளது என்றால் சரியல்ல. புலஎண்.13 ல் மட்டும் வண்டிப்பாதை பள்ளமாக உள்ளது. சர்வே எண்.14 ல் நடுமையத்தில்தான் வண்டிப்பாதை செல்கிறது என்றால் கிராம கணக்கின் படி நடுமையத்தில் தான் செல்கிறது. சர்வே எண்.14 வரை ஓடையை பாதையாக பயன்படுத்தி வந்து சர்வே எண்.14 ல் உள்ள மேற்கு புறம் உள்ள ஓடையை பாதையாக உட்பிரிவு செய்யாமல் 14 ல் நடுமையத்தில் பாதை உட்பிரிவு செய்யப்பட்டடுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.14 வழியாக எந்த பொதுமக்களும் நடந்து செல்லவில்லை என்றால் பொதுமக்கள் வண்டிப்பாதையாக பயன்படுத்திகிறார்கள். ராஜலட்சுமி பயர் ஒர்க்ஸ்காரர் மட்டுமே அந்த பாதை வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து உற்பத்தி செய்யப்பட்டு ராஜலட்சுமி பயர் ஒர்க்ஸ்கரார்கள் மட்டும் அதனை பாதையாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றாலும் மற்ற பொதுமக்கள் அனைவரும் சர்வே எண்.14 க்கு மேற்கு பக்கத்தில் உள்ள ஓடையைத்தான் நடைபாதையாக பயன்படுத்திவருகிறார்கள் என்றால் சரியல்ல. வட்டாட்சியர் அலுவலகத்தில் 7,8 பிரதிவாதிகளிடம் இருந்து கையூட்டு பெற்றுக்கொண்டு சர்வே எண்.14/2 ல் உள்ள பாதையை உற்பத்திசெய்துள்ளார்கள் என்றால் சரியல்ல (1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையோடு கேட்டுக்கொண்டது )பாதை சம்பந்தமான ஆட்சேபனை இருக்கும்போது வட்டாட்சியர் அலுவகத்தில் பாதையாக ஒதுக்கி உள்ளது சரியானது அரல்ல என்றால்சரயில்ல. கிராம கணக்கின் படி தாவா சொத்தின் வழியாக செல்லக்கூடியது வண்டிப்பாதை ஆகும். பொதுமக்கள் பயன்படுத்தும் பாதை வழியாக பட்டாசு தொழிற்சாலைக்கு பாதை மற்றும் லைசன்ஸ வழங்கியுள்ளது தவறு என்றால் சரியல்ல. பட்டாசு தொழிற்சாலைக்கு பட்டாசு தொழிற்சாலையின் உரிமையாளர்களால் தனிப்பட்ட பாதைதான் ஏற்படுத்தி கொள்ள வேண்டும் என்றாலும். பொதுமக்கள் பயன்படுத்தும் வண்டிப்பாதையை பயன்படுத்தகூடாது என்றாலும் அந்த வகையில் விதிமுறையகள் மீறப்படவில்லை

என்றாலும் சரியல்ல. பட்டாசு தொழிற்சாலை உரிமையாளருக்கு ஆதரவாக சர்வே எண்.14 க்கு மேற்கு புறத்தில் உள்ள ஓடையை மறைத்து ஓடை இல்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

சர்வே எண்.14/2 வண்டிப்பாதையை சேர்வைக்காரணம்பட்டி பொதுமக்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான்.

8 ம் பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

சர்வே எண்.14/2 வண்டிப்பாதையானது அரசு மேல்நிலைப்பள்ளி ஆரம்பத்தில் இருந்து மங்கம்மாள் கோவிலுக்கு தெற்கே சென்று முடிவடைகிறது என்றால் சரிதான். சர்வே எண்.13, 12, 14, 15, 16, 17, 35, 39 ஆகியசர்வே எண்கள் வழியாக வண்டிப்பாதை செல்கிறது என்றால் சரிதான். அந்த வண்டிப்பாதை இருப்பதால் தான் நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் போக்குவரத்துக்கு பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான்.

8 ம் பிரதிவாதி செய்யப்பட்ட கு.வி யை 7 ம் பிரதிவாதி செய்யப்பட்டதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாதி தரப்பில் செய்யப்பட்ட மறுமுதல் விசாரணை

வண்டிப்பாதை என்பது 6 அடி அகலம் உள்ளது என்றாலும் பின்னிட்டு தயார் செய்ததால் வண்டிப்பாதையின் அளவை கூட்டி காண்பிக்கப்பட்டுள்ளது என்றால்சரியல்ல. வண்டிப்பாதை உட்பிரிவு செய்யப்பட்டதால் அந்த வண்டிப்பாதையின் அகலம் உட்பிரிவுக்கு ஏற்றவாரு ஒவ்வொரு இடத்திற்கும் மாறுபடும். புலவரைபடத்தில் .... என்று குறியீடு இருந்தால் அது நடைபாதை என்றாலும் --- - என்று குறியீடு இருந்தால் வண்டிப்பாதை சரிதான். ஆனால் புலப்படத்தில் ..... என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.